ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1941/13 - 2015 නොවැම්බර් මස 17 වැනි අඟහරුවාදා - 2015.11.17

*1941/13 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் பிரிவு 44 இன் (5) ஆம் பந்தியின் பிரகாரம் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்திற்கமைய இத்தால் இதன் மூலம் அறிவிக்கப்பட்ட கார்த்திகை மாதம் 20 ஆந் திகதி 2015 ஆம் ஆண்டு அமுலுக்கு வரும் வகையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சருக்கு நியமிக்கப்பட்ட கடமைப் பணிகள் மற்றும் செயற்பாடுகள், திணைக்களங்கள், சட்ட ரீதியான நிறுவனங்கள், பொதுக் கூட்டுத்தாபனங்கள் பிரிவு 44 இன் (1) ஆம் பந்தியின் பிரகாரம் கீழ் கொடுக்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க,<br>
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார<br>
விவகாரங்கள் அமைச்சர்.

கொழும்பு,<br>
கார்த்திகை மாதம் 16 ஆந் திகதி 2015.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை

### (1) இராஜாங்க அமைச்சர் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள்

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைப் பணிகள் மற்றும் செயற்பாடுகள்* | *திணைக்களங்கள், சட்ட ரீதியான நிறுவனங்கள், பொதுக் கூட்டுத்தாபனங்கள்* | *அமுலாக்கவுள்ள சட்டங்கள்* |
| 1. இளைஞர் விவகாரங்களுடன் தொடர்புடைய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதும், கண்காணிப்புச் செய்வதும், மதிப்பீடு செய்வதும். | 1. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | * தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டம் (2006 இன் இலக்கம் 28) |
| | 2. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | * தேசிய இளைஞர் சேவைகள் மன்றச் சட்டம் (1979 இன் இலக்கம் 69) |
| | 3. தேசிய இளைஞர் படையணி | |
| 2. இளம் தலைமுறையினரைச் சரியான பாதையில் வழிநடாத்திச் செல்வதனை இலக்காகக் கொண்ட, மனோபாவ அணுகு முறை அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதும் அமுல்படுத்துவதும். | 4. தேசிய இளைஞர் விருதுகள் அதிகார சபை | * தேசிய இளைஞர் படையணிச் சட்டம் (2002 இன் இலக்கம் 21) |
| | 5. வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கம் | * குழந்தைகள் மற்றும் இளம் பராயத்தினர்களின் அவசரச் சட்டம் (1939 இன் இலக்கம் 48) |
| | 6. தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய நிலையம் | |
| 3. இளைஞர்களை மையமாகக் கொண்ட சர்வதேச அபிவிருத்தி மேம்பாட்டு ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல். | | |
| 4. வேலையற்ற இளைஞர்களை மையமாகக் கொண்ட திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல். | | |
| 5. இளைஞர் அமைப்புத் தொடர்பான வேலைகள். | | |
| 6. இளைஞர் சமுதாயத்திற்கான தன்னார்வ நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவது. | | |
| 7. மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலாக மற்றும் பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல். | | |

*12-80*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.